Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 9 சனிக்கிழமை (22-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 115

# உள்ளூராட்சித் தேர்தலில் பொ. ஐ. மு. முன்னணியில்!

## பரபரப்பான சூழ்நிலையில் நேற்று வாக்களிப்பு

கொழும்பு, மார்ச் 22

**வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் நேற்று உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு மிகவும் பரபரப்பான அதே வேளை பதற்றமான சூழ்நிலையில் நடைபெற்று முடிந்தது. இன்று அதிகாலை வரை வெளியான முடிவுகளின்படி ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பல உள்ளூராட்சிச் சபைகளில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றி முன்னணியில் இருந்தது. இன்று நண்பகலுக்குப் பின்பே முழு முடிவுகளும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

நேற்றுக்காலை 7.00 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை 4.00 மணிக்கு முடிவடைந்தது.

இலங்கையின் சமீப காலத் தேர்தல் வரலாற்றில் கண்டிராத பெரும் அளவிலான வன்செயல்கள், குழப்பங்கள் இடம்பெற்ற பின்னணியில் நேற்றைய வாக்களிப்பு நடைபெற்றது.

வடக்கு— கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள 238 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் 3 ஆயிரத்து 560 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட இத் தேர்தலில் பிரதான 12 அரசியல் கட்சிகளும் 126 சுயேச்சைக் குழுக்களும் பங்கு பற்றி இருந்தன.

கொழும்பு மாநகரசபை உட்பட 12 மாநகரசபைகளுக்கும் 31 நகரசபைகளுக்கும் 195 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. 18 ஆயிரத்து 569 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

### பரவலாக வன்செயல்கள்

நேற்று நடைபெற்ற தேர்தலை சீர்குலைக்கும் நோக்கத்துடன் பல அசம்பாவிதங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் இடம் பெற்றுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

குருநாகல்மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பல வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்காளர்களை அச்சுறுத்தியுள்ளார். இந்த அரசியல்வாதியின் மகனும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரி- 56 ரக துப்பாக்கி ஒன்றுடன் வாக்குச் சாவடிகளுக்கு சென்று இவர் வாக்காளர்களையும், வாக்குச் சாவடி அதிகாரிகளையும் அச்சுறுத்தியது மாத்திரமல்லாமல் ஆள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ★ தேர்தல் முடிவுகள்

கொழும்பு, மார்ச் 22

நேற்று நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் சில வருமாறு: (கட்சிகள் பெற்ற வாக்குகளும் அதன் அடிப்படையில் உள்ளூராட்சி சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் எண்ணிக்கையும்)

### கடுகண்ணாவை நகர சபை

★ ஐ. தே. க. — 354 வாக்கு — 6 உறுப்பினர்

★ பொ.ஐ.மு. — 243 வாக்கு — 2 உறுப்பினர்

★ சுயேச்சைக்குழு(2) 107 வாக்கு — 1 உறுப்பினர்.

★ சுயேச்சைக்குழு (1) 11 வாக்கு

★ ந. ச. ச. க. — 02 வாக்கு

### பலாங்கொடை நகர சபை

★ பொ. ஐ. மு. — 3369 வாக்கு — 6 உறுப்பினர்.

★ ஐ. தே. க — 2857 வாக்கு — 3 உறுப்பினர்.

★ ஜே. வி. பி. — 115 வாக்கு.

(8 ஆம்பக்கம் பார்க்க)

# புத்தளம் வாக்குச் சாவடி ஒன்றில் குண்டு வெடிப்பு! 10 பேர் காயம்!!

கொழும்பு, மார்ச் 22

புத்தளம் மாவட்டத்தில் வாக்குச் சாவடி ஒன்றில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 10 பேர் காயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம், கொஸ்வத்த வாக்குச் சாவடியிலேயே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதுதொடர்பாக பொ. ஐ. மு. வேட்பாளர் புத்தளம் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குண்டுவெடிப்பின் பின்னணியில் ஐ. தே. க. ஆதரவாளர்கள் இருந்துள்ளதாக அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் நடந்த மாவட்டங்களில் இரவு நேர ஊரடங்கு அமுல்

கொழும்பு, மார்ச் 22

நேற்றிரவு 10.00 மணியில் இருந்து கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலும் —

11.00 மணியிலிருந்து ஏனைய 14 மாவட்டங்களிலும் — ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இன்று சனிக்கிழமை காலை 8 மணிவரை இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அரசாங்கம் அறிவித்தது.

ஊரடங்குச் சட்டத்தை மிகவும் கடுமையாக அமுல் செய்யும்படி பாதுகாப்பு அமைச்சு படையினரைப் பணித்திருந்தது— (இ-4)

## சர்ச்சைக்குரிய சுவரொட்டி: பொ. ஐ. மு. வேட்பாளர் கைது!

கொழும்பு, மார்ச் 22

'ஜே.வி.பிக்கு வாக்களிக்காது விட்டால் மீண்டும் 88, 89 ஆண்டு நடந்த கொலையுகம் வரும்' என்று ஜே.வி.பி. எச்சரிப்பதாக வெளிவந்த சுவரொட்டிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவரின் வீட்டில் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜே.வி.பியின் சின்னமான மணியுடன் பிரசுரமான இந்த சுவரொட்டிகள் மாத்தறைப் பகுதிகளில் எங்கும் காணப்பட்டன.

இது தொடர்பாக ஜே.வி பி. அமைப்பு செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணையில் ஈடுபட்ட பொலீஸார் மாத்தறையில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவரின் வீட்டைத் திடீர் சோதனை செய்ததாகவும் —

-அங்கிருந்து இந்த வகையான 380 சுவரொட்டிகளைப்பொலீஸார்கைப்பற்றினர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அந்த வேட்பாளர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

(இ-3-150)

### முச்சந்தி முரளி



ஆர் வென்றாலும் போர் நிற்குதில்லையே......!

## கைதானவர்கள் பற்றி ஆராய்வு

குடாநாட்டில் கைதானவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள், ஆகியோரின் பெற்றோர் உறவினர்கள் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வதற்காக இன்று ஒன்று கூடுகிறார்கள்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் இன்றுகாலை 9 மணிக்கு கூடும் இவர்கள் உறவினர்கள் குறித்து தாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வார்கள். (3)

### எம்.ஐ -24 ஹெலியில்

## வெளிநாட்டவர்களை இழந்ததே தற்பொழுதுள்ள பிரச்சினை

### படை வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 22

முல்லைத்தீவுப் பகுதியில் எம். ஐ- 24 ரக தாக்குதல் ஹெலி காணாமற் போனது பெரிய இழப்பல்ல. வெளிநாட்டவரான விமானிகளின் இழப்புத்தான் பெரும் பிரச்சினையாக உள்ளது. இலங்கையில் சிவில் யுத்தம் ஆரம்பமாகிய பின்னர் வெளிநாட்டவர்கள் யுத்தத்தில் இறந்தது இது தான் முதல் தடவை ஆகும்;

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

10 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய —

மணித்தியாலத்துக்கு 270 கிலோ மீற்றர் ஓடக்கூடிய வேகம் கொண்ட —

57 அடி நீளமான — எம். ஐ. 24 தாக்குதல் ஹெலிக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ரஷ்யர் எவரும் பங்குபற்றவில்லை

### கொழும்பில்; ரஷ்ய ராஜதந்திரி தகவல்

கொழும்பு, மார்ச் 22

''இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரச படைகளுடன் இணைந்து எந்த ரஷ்ய நாட்டவரும் சண்டையில் ஈடுபடவில்லை. ரஷ்ய நாட்டுக் கூலிப் படை இங்கு இருக்கின்றதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்களா என்பதும் எனக்குத் தெரியாது''

கொழும்பில் உள்ள ரஷ்ய

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அடிப்படை உரிமை மீறல்

## அனுராவின் மனுவை நீதிமன்றம் ஏற்றது

கொழும்பு, மார்ச் 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் நாலந்தா எல்லாவெல படுகொலை தொடர்பான சந்தேக நபரைக் கண்டுபிடிக்க தமது வீட்டில் பொலீஸார் தேடுதல் நடத்தியதை எதிர்த்து ஐ. தே க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

(இ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNICEF

**யுனிசெப் (UNICEF) நிறுவனத்தினர்**

286, நாவலர் வீதியில் அமைந்துள்ள

தமது திட்டமிடல் பணிமனையில் 1997 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து இயங்குகிறார்கள்.

இயக்குநர்

(சி-355)

## புலமைப் பரிசில்'97

16-03-97 எமது நிறுவனத்தில் நடந்த 15 ஆவது பயிற்சிப் பரீட்சையில் முதன்மைப்புள்ளி பெற்ற

**செல்வன் தியாகராஜா சுகந்தனை**

(யா/ புனித ஜோண் பொஸ்கோ)

**பாராட்டுகின்றோம்**

23-03-97 ஞாயிறு வழமைபோல் 16 ஆவது பரீட்சை நடைபெறும்.

22-03-97 சனி எல்லாப் பாடங்களுக்குமான முதலாம் தவணைக்கான மாதிரிப் பரீட்சை நடைபெறும்.

**BOND INSTITUTES- யாழ்ப்பாணம்.**

(45943)

## யா|கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி

விளையாட்டுப் போட்டிக்கான

## பரிசளிப்பு நிகழ்வு - 1997

இடம்: கல்லூரி கலையரங்க மண்டபம்

காலம்: இன்று (22-03-1997) சனிக்கிழமை
முற்பகல் 10. 30 மணி [ புதியநேரம் ]

தலைமை: திரு. ந. சிவகடாட்சம் (அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு. ஆ. இராஜேந்திரன்
(கோட்டக்கல்வி அதிகாரி, கோப்பாய்)

சிறப்பு விருந்தினர்: திரு. ந. நந்தகுமார்
(உரிமையாளர், நியூ ஸ்ரான்லீஸ், யாழ்ப்பாணம்.)

கௌரவ விருந்தினர்கள்: கல்லூரியின் மைந்தர்கள்
திரு. S. செல்வரட்னம்
(பிரதம எழுதுவினைஞர், பிரதேச சபை, நல்லூர்)
திரு. F.A. சில்வெஸ்டர்
(விற்பனை முகவர், சோவலஸ் & ஹேட்ஜெஸ் லிமிட், கொழும்பு)

பெற்றோர், பழைய மாணவர்கள். நலன்விரும்பிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

விளையாட்டு அமைப்புக்குழு,
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

[45936]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி ச. ஞானேஸ்வரி (ஞானம்)**

(அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர். மக்கள் வங்கி, நகரக்கிளை, திருமலை)

மண்ணில்: 22 - 10 - 1945
விண்ணில்: 16 - 03 - 1995

திதி: 22 - 03 - 1997

காலம் இட்ட கட்டளையை காலனவன் ஏற்றானோ
வந்து தன் பணி முடித்து ஈராண்டு சென்றதோ
ஈராண்டு சென்றும் உங்கள் நினைவலைகள் தீரவில்லை
நீங்காத துயருடனே தினமுங்களை நினைக்கின்றோம்

''ஈஸ்வரி இல்லம்''
புலோலி தெற்கு, புலோலி,

- குடும்பத்தினர்

(45938)

## வி. அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 22 வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தம்பாலை, கதிரிப்பாய், வளலாய், இடைக்காடு, பத்தமேனி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிப்போருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் தம்பாலை, கதிரிப்பாய் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ஐ)

## யா/74 அ. அட்டை

யாழ்நகர் கிழக்கு, யா/74 கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டை இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிராம சேவையாளர் பணிமனையில் வைத்து வழங்கப்படும். (இ)

## சமய சந்நிதிகளில்

நுணாவில்மத்தி அருள்மிகு கந்தசுவாமி (வைரவர்) ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. முருகப்பெருமான் காலையில் சித்திரத் தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

இன்று மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழாவும், திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (அ)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பங்குனி திருக்குளிர்ச்சி அபிஷேகம் தற்போது நடைபெற்றுவருகிறது. (ஐ)

★ ★ ★

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை காலை நடைபெறும். நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவ தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

இணுவில் மேற்கு செட்டி வீதி ஸ்ரீ சிவமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று பிற்பகல் தீக்குளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது. காலை 7 மணி தொடக்கம் விசேட பூசை வழிபாடுகளும் சங்காபிஷேகமும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

பாண்டியன் தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் பங்குனி உத்தரத்தை யொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6. 30 மணி முதல் நடேசர் சிவகாமசுந்தரிக்கு பூசையும் விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். (ஐ-100)

## விற்பனைக்கு

சகல இன ரெலிவிஷன்களின் fly Back, IC, ரான்சிஸ்ரர், Video Head, Belt மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். கொழும்பில் இருந்து ஓடர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
Stanly Road, Jaffna.
(றெயில்வே கடவை அருகாமை) (45921)

## கல்விப் பணிப்பாளர் இடமாற்றம்

வவுனியா மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய துரை தியாகராசா வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில அபிவிருத்தி நிலையப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளராக எஸ். புலேந்திரன் அல்லது எஸ். மகாலிங்கம் நியமிக்கப்படலாம் என்று மாகாண கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

உ

கோப்பாய் வடகோவை

## ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி

**ஆலய தரும பரிபாலன சபை**

## அறிவித்தல்

**வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம்**

மேற்படி பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக 27 - 02 - 1997 ஆம் திகதி அறிவித்து இருந்தவாறு, இன்று (22 - 03 - 1997) நடத்த முடியாது உள்ளதனால் அது பிற்போடப்பட்டு உள்ளது.

புதிய திகதி தீர்மானிக்கப்பட்டதும் பத்திரிகை வாயிலாக ஆலய வழிபடுவோருக்கு அறியத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

க. ஸ்ரீஸ்கந்தராசா
தலைவர்

ஐ. சிவலோகநாதன்
செயலாளர்

(45942) 22 - 03 - 1997

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வ. து.)

## அறிவித்தல்

தென்மராட்சிக் கொத்தணிக்குச் சொந்தமான கொடிகாம உற்பத்தி நிலையத்தில் விடப்பட்டிருந்த சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் இலக்கஇரண்டு சில்லு உழவு இயந்திரம் காணாமற் போயுள்ளது. இந்த இயந்திரத்தைக் கண்டு பிடிப்பதற்கு உதவும் தகவல் தருவோருக்கு சங்கத்தால் சன்மானம் வழங்கப்படும்.

இல. 71ஸ்ரீ796
இயந்திர இலக்கம். 65/061941
தள இலக்கம், 25238

**- பொது முகாமையாளர்**

மானிப்பாய்.
21-03-97 (9421)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ம. திருஞானசம்பந்தர் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி**

**வைரரத்தினம் விநாயகமூர்த்தி**


அவர்களின் மறைவினைக் கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரிய ஆசிரியைகள், ஊழியர்கள்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய், (45939)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 05 — 1972



மறைவு: 22 — 03 — 1996

**சிவசம்பு சிவநேசன்**

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்ந்து
எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத நேசனே!
இள வயதிலேயே இறைவனடி சேர்ந்து விட்ட
எம் அரிய செல்வமே!
உன்னை நினைந்து உருகும் எங்கள்
இதயக் கோயிலில் என்றும் நிலைத்திருப்பாய்!

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி, பெறாமகன்,
மருமக்கள், உறவினர்கள்.

198/9, பொன்னப்பா ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (9423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

## ஹெல்சிங்கி உச்சிமாநாடு ஆரம்பம்

# கிளின்ரனுடன் பேச்சில் யெல்ட்சின் கடும் போக்கு?

ஹெல்சிங்கி, மார்ச் 22

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனும் ரஷ்ய அதிபர் யெல்ட்சினும் பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியில் உயர்நிலைப் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளனர்.

பின்லாந்து அதிபர் அளித்த இரவு விருந்தில் கலந்து கொண்ட இரு அதிபர்களும் முதலில் சாதாரண நிலையில் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அடுத்த நூற்றாண்டுக்கான பாதுகாப்பான, அமைதியான ஐரோப்பாவை உருவாக்க உழைக்கும் படி இரு அதிபர்களையும் பின்லாந்து அதிபர் கேட்டுக் கொண்டார்.

விருந்தின்போது இரு அதிபர்களும் ஆக்கபூர்வமாகவும் நகைச்சுவை உணர்வுடனும் உரையாடியதாக இருதரப்புப் பேச்சாளர்களும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

ஆயினும்முறையான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் போது நேட்டோ விரிவாக்கம் பற்றி முக்கியமாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளின்ரனுடனான பேச்சுக்கள் நடைபெறுவதற்கு முன்னர் அது தொடர்பாகத் தனது கருத்துக்களைத் தெரிவிக்கும் பல அறிக்கைகளைமொஸ்கோவில் அதிபர் யெல்ட்சின் விடுத்திருந்தார்.

பேச்சின் போது அதிபர் கிளின்ரனுடன் கடும் போக்கை அவர் கடைப்பிடிப்பார் என்பதையே அந்த அறிக்கைகள் பிரதிபலிப்பதாகத் தெரிகின்றன என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-10)

# ரஷ்யாவில்மக்கள்புரட்சி எந்நேரமும் வெடிக்கும்!

### எச்சரிக்கிறார் கொர்பச்சேவ்



கொர்பச்சேவ்

மொஸ்கோ, மார்ச் 22

மக்கள் கலகம் ஒன்று ரஷ்யாவில் எவ்வேளையிலும் வெடிக்கலாம்.

— இவ்வாறு எச்சரித்திருக்கிறார் முன்னாள் ரஷ்ய அதிபர் மிகைல் கொர்பச்சேவ்.

சாதாரண ரஷ்யர்கள் 10 பேரில் 8 பேர் இன்று ஒருவேளை உணவுக்கு வழியற்று பரம ஏழைகளாக மாறியுள்ளனர்.

லட்சக்கணக்கான அரச ஊழியர்களுக்கு கடந்த 6 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. வெகுஜன எழுச்சிக் கலகம் ஒன்று எவ்வேளையிலும் வெடிக்கலாம் என்று — அவர் கூறியுள்ளார்.

### கால அவகாசம் முடிவடைந்தது

# ஆயுதங்களைக் கைவிட கிளர்ச்சியாளர் மறுப்பு

ரிரானா, மார்ச் 22

அல்பேனியாவில் கிளர்ச்சியாளரைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு விசேட பொலீஸ் பிரிவுகளை அமைக்கும் முயற்சியில் இடைக் கால அரசு ஈடுபட்டுள்ளது.

அல்பேனியாவிலுள்ள பல நகரங்களில் ஆயுததாரிகள் வீடுகள் மற்றும் அரச பணிமனைகளைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்க அளிக்கப்பட்ட கால அவகாசம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட அனைத்து மக்களின் ஒத்துழைப்பையும் இடைக் காலப் பிரதமர் பஸ்கின்பீனா கோரியுள்ளார்.

அல்பேனிய அதிபர் சாலி பொரிஷா ராஜினாமாச் செய்யும்வரை ஆயுதங்களைக் கையளிக்கமாட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிபர் பொரிஷா ராஜினாமா செய்யாவிடின் கிளர்ச்சியார்களால் போட்டி அரசு உருவக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## உலக அரங்கில்

# அதிபரின்யுத்த நிறுத்தக்கோரிக்கை: ஸயர் கிளர்ச்சியாளர் நிராகரிப்பு!

### நெருக்கடிக்குத் தீர்வு காணதேசிய சபை நிறுவப்படும்?

கிசங்கானி, மார்ச் 22

ஸயரில் அதிபர் முபுட்டுவின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள கிளர்ச்சியாளர்கள் அதிபர் பதவி விலகும் வரை தங்களது யுத்த நடவடிக்கைகளை நிறுத்த முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

சிகிச்சைக்குப் பின்னர் வெளிநாட்டில் இருந்து இன்று நாடு திரும்பும் அதிபர் முபுட்டு நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் தேசிய சபை ஒன்றை நிறுவுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள நிலையில் ஸயரில் கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்தை அரசுப் படைகளால் நிறுத்த முடியாதுள்ளது. இருப்பினும் பாதுகாப்புப் படைகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் அதிபர் முபுட்டு ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளர்ச்சிப்படைகள் தற்போது ஸயரின் இரண்டாவது பெரிய நகரான லுபும்பாஷியைக் கைப்பற்ற முன்னேறி வருகின்றன. (ஐ-10)

# லெனினின் உடலைப் புதைக்கும் முடிவுக்கு ரஷ்யாவில் கடும் எதிர்ப்பு!

மொஸ்கோ, மார்ச் 22

சோவியத் ரஷ்யாவின் தனிப் பெரும் தலைவரும் இந்த நூற்றாண்டின் அரசியல் சிற்பியுமான விளாடிமீர் லெனினின் பாதுகாக்கப்பட்டுவரும் உடலை மண்ணுக்குள் புதைத்துவிட அதிபர் யெல்ட்சின் மேற்கொண்டுள்ள முடிவு ரஷ்ய நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு உணர் வலைகளை உருவாக்கியுள்ளது.

காடைத் தனமான இச் செயல் நிறத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது.

கிரெம்ளின் அருங்காட்சியகத்தில் லெனினில் உடல் விஞ்ஞான முறைப்படி பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆயிரக் கணக்கான ரஷ்ய மக்கள் தினமும் அங்கு சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதிபர் யெல்ட்சினின் இந்த முடிவு பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் சாதனைகளை வரலாற்று நிகழ்வுகளிலிருந்து அடியோடு அழித்துவிடும் முயற்சி என கம்யூனிஸ்டுகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ-10)

## தஞ்சம் வழங்க கியூபா தயார்

லீமா, மார்ச் 22

பெரு நாட்டின் லீமா நகரில் கடந்த மூன்று மாதங்களாக 72 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் ''துப்பக் அமாறு'' போராளிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் அரசியல் தஞ்சம் வழங்க கியூபா முன்வந்துள்ளது.

ஜப்பானின் எழுத்து மூலமான வேண்டுகோளை கியூபா அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்றுடன் பெருநாட்டு லீமா நகர் பணயக் கைதிகள் விவகாரம் 95 நாள்களை எட்டியுள்ளது. (ஐ-10)

# இஸ்ரேலிய படையுடன் பலஸ்தீனியர் மோதல்!

ஜெருஸலேம், மார்ச் 21

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தை எதிர்த்து பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியத் துருப்புகளுடன் மோதியுள்ளனர்.

அவர்கள் கற்களினால் இஸ்ரேலியத் துருப்பினரைத் தாக்கினர். பதிலுக்கு இஸ்ரேலியத் துருப்பினர் ரப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்திச் சுட்டனர். கண்ணீர் புகைக் குண்டுகளையும் பயன்படுத்தினர்.

இந்த மோதலில் ஒருவர் காயமடைந்ததாகவும், 14 பேர் கண்ணீர்ப் புகையால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வன்செயலை வன்செயலால் ஒடுக்குவோம் என பலஸ்தீனியர்கள் கூறியுள்ளனர். (ஐ-10)

# கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுகள் 95 ஆம் ஆண்டின் பின்னர் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம். மார்ச் 22

குடாநாட்டில் வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடும் பாதிப்புற்றோர் நிவாரணத் திட்டத்துக்கான கொடுப்பனவுகள் கடந்த 95ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிவாரணத் திட்டத்தின் கீழ்—

வன்செயலால் இறந்தவர்களின் குடும்பத்துக்கு 50ஆயிரம் ரூபா நஷ்டஈடும்—

காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடும்— வழங்கப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தக்கொடுப்பனவு வழங்க நிதி கிடைக்கவில்லை என்று செயலகவட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

கடந்த கால சம்பவங்களில் இறந்த 8 ஆயிரத்து 498 பேரில் 6 ஆயிரத்து 293 பேருக்கு மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும்—

எஞ்சிய 2 ஆயிரத்து 705 பேருக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது.

காயம் அடைந்தவர்களில் 2 ஆயிரத்து 516 பேரில் இதுவரை ஆயிரத்து 203 பேருக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்றும்--

இன்னமும் ஆயிரத்து 313 பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவை வழங்க 6 கோடி 60 லட்சத்து 75 ஆயிரம்ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

வன்செயல்களில் சிக்கி காயமடைந்து நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்து இதுவரை கொடுப்பனவைப் பெறாத பலர் பின்னர்நோய் காரணமாக இறந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இவ் வாறானவர்களுக்கான கொடுப்பனவை இனிவழங்க முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

இந்தத் திட்டத்தின் படி காயமடைந்தவர் மட்டுமே கொடுப்பனவை பெறத்தகுதியானவர் என்பதால், அவரது குடும்பத்தவர் இந்தக்கொடுப்பனவைப் பெற தகுதியற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# யாழ். மாநகரசபைப் பகுதியில் 43பேருக்கு மூளை மலேரியா

### 41பேர் வன்னியில் இருந்துவந்தவர்கள்

குருநகர், மார்ச் 22

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மூளை மலேரியா நோய் தீவிரமாகப் பரவிவருவதாக யாழ். மாநகர சுகாதாரப் பகுதி தெரிவித்துள்ளது.

இதுவரை 43 பேர் மூளை மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 41 பேர் வன்னியில் இருந்து வந்து மீளவும் இங்கு குடியேறியவர்களாவர். இம் மூளை மலேரியா நோய் மேலும் பரவாமல் தடுக்க பல நடவடிக்கைகள் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியால் எடுக்கப்பட்டுள்ளது.

— கூடுதலாக மூளை மலேரியா நோய் பரவிய இடங்கள் இனங்காணப்பட்டு அவ்விடங்களில் நுளம்பு பெருகும் இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு மலத்தியன் தெளிக்கப்பட்டு வருகின்றது.

— பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும் மலேரியா நோய் சம்பந்தமான விழிப்பூட்டல் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-51)

## அரியாலையில் ஆயுர்வேத நிலையம்

திருநெல்வேலி, மார்ச் 22

அரியாலை பகுதி மக்களின் நலன் கருதி நல்லூர் பிரதேச சபை தலைமையகத்தினால் அரியாலை — கண்டி வீதியில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கிளை ஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. வாரத்தில் மூன்று தினங்கள் இவ் வைத்தியசாலை செயற்பட்டுவருகிறது. (ஐ-135)

## வட்டுக்கோட்டை ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சை

திருநெல்வேலி, மார்ச் 22

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையில் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. சங்கானை அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் பல் வைத்திய அதிகாரியே இங்கு சென்று பல் வைத்திய சிகிச்சையை மேற்கொண்டுவருகிறார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சி கோழி (Broiler) விற்பனைக்குண்டு. 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (45926)

### வீடு தேவை

திருநெல்வேலி சந்திக்கும், யாழ். போதனா வைத்திய சாலைக்கும் இடையில் மருத்துவபீட மாணவர்களுக்கு வாடகைக்கு வீடு தேவை. மின்சார வசதியுடன் விரும்பத்தக்கது. தொடர்பு: இல: 65, மணல்தரை லேன், சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (9407)

### தேவை

சுண்டுக்குளியில் உள்ள கந்தோரில், G.C.E. (A/L) படித்த ஆங்கில தட்டெழுத்தாளர், பகுதி நேர வேலை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (9419)

நல்ல பாவனையிலுள்ள வெஸ்பா(Scooter)தொடர்பு வே. நடராசா சட்டத்தரணி 96 நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (9418)

### ஓடு தேவை

எமக்கு மூவாயிரம் ஓடுகள் தேவை. தரகர் இல்லாது நேரடியாகத் தொடர்பு கொள்க: துர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி (45906)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் கதைக்க, வாசிக்க, எழுத பயிற்சி கொடுக்கப்படும். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி இல. 426 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் சந்தி). (54900)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 154, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். குறிப்பு; காலை 8.30 மணிவரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9409)

இறைச்சிக் கோழி (புறோயிலர்), பேடு (கல்பேட்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45931)

### தவறிவிட்டன

செல்லையா சத்திய குமாரன் என்பவரது இல. 552100883V தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 34/5, செட்டித்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (45917)

### மணமக்கள் தேவை

தங்களுக்குத் தேவையான மணமக்களை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ குடும்ப மரபுடன் தெரிவுக்கு காலையில் மட்டும் நேரில் வருபவருக்கு விரைவில் பலனுண்டு. உள்ளூர் மணமக்களுக்கு இலவச சேவை. முத்துக்குமாரு செல்லப்பா புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (45930)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி நகரை அண்டிய கோயில் சுற்றாடலில் நல்ல தண்ணீருடன் கூடிய ஐந்து பரப்புக் காணியும், கல்வீடு வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி/325)

---

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி,
வீரபத்திர சமேத

## பத்திரகாளி அம்பாள்
## தேர் உற்சவம்

23 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை புதியநேரம் 12.00 மணியளவில் வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி அம்பாள் எழுந்தருளி தேரில் வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளுவார். அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

அன்பளிப்பு:-
முருகன் வெதுப்பகமும், கடையும்.
''உதயன்'' விநியோகஸ்தர், சங்கரத்தை.
(சி/352)

---

உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## சித்திரத்தேர்
## பவளக்கால் நடும் விழா

சாவகச்சேரி, சங்கத்தானை தட்டாதெரு

## இத்தியடி வீரகத்தி விநாயக
தேவஸ்தானம்

நாளை **23 - 03 - 1997** (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9-28 தொடக்கம் 11-00 வரை உள்ள சுப முகூர்த்தத்தில் மேற்படி சித்திரத்தேர் பவளக்கால் நாட்டுவிழா நடைபெறும்.

அன்றைய விழாவினைச் சிறப்பிக்க
சிவஸ்ரீ. சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்) கலந்து கொள்கின்றார்.
விநாயக அடியார்கள் அனைவரும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தேர்த் திருப்பணிச் சபையினரும்,
ஆலய பரிபாலன சபையினரும்.
(45904)

---

உ
நுணாவிற்குளம்
அருள்மிகு

## கண்ணகை அம்பாள் தீர்த்தக்கேணி
அமைக்கும்

## ஆரம்பப் பணி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
குருமஹா சன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்
அவர்களின் ஆசியுடன்

**23 - 03 - 1997** ஞாயிற்றுக்கிழமை காலை 9·40 முதல் 10.51 மணிக்கிடையில் உத்தர நட்சத்திரமும் பூரணையும் கூடிய சுபவேளையில் நாட்பொழி எடுக்கத் திருவருள் பாலித்துள்ளது.


அத்தருணம் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து ஒருபொழி மண் எடுத்து, இப்புண்ணிய கைங்கரியத்தில் உங்கள் பங்களிப்பை நிறைவேற்றுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள்
கூட்டுப் பிரார்த்தனை சபை.
(சி/354)

---

## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்;
1927 — 04 — 04



மறைவு:
1997 — 02 — 21

### அமரர் சின்னத்தம்பி இராசா

அவர்கள் நோர்வேயில் இறைபதம் அடைந்துவிட்டார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவிப்பதோடு, இந் நினைவு நாளில் அன்னாரது இஷ்ட தெய்வமான காளிஅம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

மகன், மருமகன், பேர்த்தி,
மைத்துனர், பேரமக்கள்.

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (45922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## G. A. Q.
(கலை முதற் தேர்வு)
யாழ். பல்கலைக்கழகம்
**வெளிவாரி-1998**
விரிவுரைகள் ஆரம்பம்
26-3-97 புதன்
மு. ப. 7.00
**SHAMROCK**
யா/ஈச்சமோட்டை வீதி.
(45888)

---

### மணமகள் தேவை

நோர்வேக் குடியுரிமையும், வீடும், வாகனமும் உள்ள பிளம்பர் ரெக்னிசனாக வேலைசெய்யும் பொறியியலாளருக்கு வயது 29. அழகிய மணமகள் தேவை. புகைப்படத்துடனும் (அவசியம்) தேவையானவிவரங்களுடனும் தொடர்பு கொள்க.

பொருத்தமற்றவை திருப்பித் தரப்படும்.

தொடர்பு:
ஆ. நடராசா, ஏரகம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (45855)

---

யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## செயற்குழுக் கூட்டம்

மேற்படி செயற்குழுவின் அவசரக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (23 - 03 - 97) காலை 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். செயற்குழு அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

பொ. பாலசுந்தரம்பிள்ளை.
தலைவர்.
20 - 3 - 97
(சி/ 356)

---

## கடை வாடகைக்கு

தற்பொழுது சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கடை, சகல தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு.

மொத்த, சில்லறை வியாபாரங்களுக்கு ஏற்ற இடம்:

**75, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(9417)

---

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

தனது வழமையான உணவுப் பொதிகளை முற்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை பின்வரும் விலைகளில் வழங்குகின்றது.

மரக்கறிப் பொதி ரூபா — 30/-
இறைச்சிப் பொதி ரூபா — 35/-
மீன் பொதி ரூபா — 40/-
கோழிப் புரியாணி ரூபா — 75/-

நூல்டிஸ், பிரைட்ரைஸ் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு உணவு வகைகளின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்கட்கு:
முகாமையாளர்,
ஜெசித்தாரா
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

ஓடர்கள் உடன் கவனிக்கப்படும்
(புது யுகத்தில் புது உருவம்)
ஜெசித்தாரா
(45933)

---

ஊர்காவற்றுறை
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு
கூட்டுறவுச் சங்கத்தின்
விசேட

## பொதுக் கூட்ட அறிவித்தல்

ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 05-04-1997 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்தின் உப தலைவர் திரு. க. கனகராசா அவர்களது தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறும். சகல உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கூட்ட நிகழ்ச்சி நிரல் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

க. கனகராசா — உபதலைவர்
அ. லோறன்ஸ் — செயலாளர்

ஆஸ்பத்திரி வீதி,
ஊர்காவற்றுறை.
20-03-97. (45911)

யாழ்ப்பாணம் நல்லூர்



பண்ணாகம் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில்

**பண்ணாகம்**

# விசவத்தனை முருகமூர்த்தி கோயில் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

**22 – 03 – 97**




## விளம்பர அன்பளிப்பு செய்தோர்

இளம் விவசாயிகள் கழகம்
பண்ணாகம்

அம்பாள் கலை மன்றம்
பண்ணாகம்

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
பண்ணாகம்

ஐக்கிய நாணய சங்கம்
பண்ணாகம்.

விசவத்தனை முருகன் கோயில்
பரிபாலனசபை,
பண்ணாகம்.

த. யோகேஸ்வரன்
(சின்னண்ணை)
சைக்கிள்ஸ் வேக்ஸ்,
பண்டத்தரிப்பு.

திருமொழி அச்சகம்
சங்கானை.

கீர்த்தா அச்சகம்
சங்கானை.

N. தவம் ஜெயந்தி 'மில்'
சுழிபுரம்.

ராஜா பதிப்பகம்
பண்ணாகம்.

ஸ்ரீ வரதராஜா
வெதுப்பகம்
பிரதான வீதி,
சுழிபுரம்

சு. இரத்தினம்
வாணிபம்,
பண்ணாகம்.

தவம் சைக்கிள்ஸ்
வேக்ஸ்
பிரதான வீதி,
சுழிபுரம்.

முருகன் பல்பொருள்
வாணிபம்,
பண்ணாகம்.

சாயிராம் பொத்தக சாலை
தொல்புரம்,
சுழிபுரம்.

கேமா ஸ்ரோர்ஸ்
பண்ணாகம்.

கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்
பண்ணாகம்.

பாரதி இன்ஸ்ரிரியூட்
சித்தன்கேணி.

தேவி கிறைண்டிங் 'மில்'
பிரதான வீதி,
சுழிபுரம்.


# முருகன் அருள் வேண்டுவோம்

ஓம் சரவணபவ.


வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்தளிக்கும் விசவத்தனை வேலவன் தேரேறி உலா வரும் கண்கொள்ளாக் காட்சியினை கண்டு களித்திடும் நாள் இன்று. பக்தர்கள் அவன் அருள் வேண்டி அவன் தலம் நாடி, அவன் புகழ் பாடி பரவசமடையும் நாள் இது.

குன்று தோறாடல் செய்யும் குமரன் குடியிருக்கும் தலங்கள் பல நம் ஈழவள நாட்டில் பல பகுதிகளிலும் உள்ளன. கண்கண்ட தெய்வமான முருகப்பெருமான் கருணை ஒளி பரப்பி மண்ணுலகத்தை காத்து அருளும் இந்த ஆலயங்களுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் முறையே அமைந்துள்ள பண்ணாகம் பதியில் பக்தி மிக்க சூழலில் பரவிப் போற்றும் தலமாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில்.

இக்கோயில் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் போகும் மானிப்பாய் நெடுஞ்சாலையில் 14 ஆம் கி. மீற்றர் கல்லருகே வடக்குத் திசை நோக்கிச் செல்லும் வீதியில் ஏறத்தாழ 500 யார் தூரத்திலுள்ளது. வயலும் வயல் சார்ந்த சூழலிலும் சோலைகள் நிறைந்த மருத நிலச் சூழலில் மகிழ்வுடன் அமர்ந்து இக்கிராம மக்களுக்கு துன்பம் போக்கி வல்வினையறுத்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான் முருகன்.

இந்த ஆலயத்தை 1954 ஆம் ஆண்டு தொடங்கி பரிபாலனசபையார் பொறுப்பேற்றதில் இருந்து ஆகம முறைப்படி மூன்று வேளைப் பூசைகளும், வெள்ளிக்கிழமைகளில் பஜனைகளும், வைகாசி இரண்டாம் செவ்வாயில் ''வைரவர்'' பொங்கலும் நடைபெற்று வருவது வழக்கம். பங்குனி மாதம் ஒன்பதாம் நாள் (97-03-22 ஆம் திகதி) சனிக்கிழமை பூர நட்சத்திரத்தில் தேர்த் திருவிழா நடைபெற இறைவன் திருவருள்பாலித்துள்ளான்.

அதிகாலையில் சகல கிரியைகளுடனும் ஆரம்பமாகி காலை 10.00 மணிக்கு சண்முகார்ச்சனையுடன், வசந்த மண்டப பூசையும் ஆரம்பமாகும். முருகன் சிங்காசனத்தில் அமர்ந்து உள்வீதியில் அசைந்தாடி, நாதஸ்வர இசைமுழங்க, உலா வருவார். கற்பூரச் சட்டி ஏந்திய பக்தர்களும், பாற்காவடிகள், பறவைக் காவடிகள் எடுப்போரும் தமதுநேர்த்திகளைநிறைவேற்றுவோரும், மலர்மழை பொழிபவர்களும், ஆலவட்டம், குடை பிடிப்போரும் தீவெட்டி ஏந்துவோரும் முன்னே செல்ல, இன்னிசையுடன் தேவாரம் பாடிப்பரவுவோரும், அங்கப் பிரதட்சணம் செய்யும் ஆண்களும், அடியழிக்கும் பெண்களும் கரகோஷமிடும் பக்தர்களும் பின்னே வர ஆறுமுகப் பெரு



மான் எழுந்தருளும் காட்சி, கண்டோர் உள்ளத்தை உவகைக் கடலில் ஆழ்த்தி, மெய் மறக்கச் செய்து பக்திப் பரவச மூட்டும் தன்மையது. வெளிவாசலில் காந்தருவர்கள் மலர் மாலை சூட்டியதும் பின் அங்கிருந்து முருகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

சித்திரத் தேரில் கட்டப்பட்ட மணிகள் கிண்கிணி ஓசை ஒலிக்க பக்தர்களின் அரோகரா எனும் கோஷம் வானத்தை பிளக்க, சங்கு நாதம் இயம்ப ஆறுமுகப் பெருமான் அழகிய சித்திரத் தேரில் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மக்கள் வெள்ளத்தினுள் மிதந்து சென்று வீதிகள் தோறும் எல்லைமான பந்தல்கள், தாகம் தணிக்கும் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து வரவேற்று வழிபடுவார்கள்.

தேர் வலம் வந்து தன் இருப்பிடத்தை அடைந்ததும் சண்முக அர்ச்சனை நடைபெறும். அதன் பின்னர் ஆறுமுகப் பெருமான் பச்சை சார்த்திய எழில் கோலத்துடன் ஆலயத்தினுள் வந்தடைவார். இத்தினத்தில் பக்தர்களுக்கு அன்னதான சபையினரால் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது.

மறுநாள் (97- 03- 23-ம் திகதி) பங்குனி உத்தரத்துடன் கூடிய பூரணைத் தினத்தில் தீர்த்த உற்சவமும், அன்னதானமும் நடைபெறும்.

இச்சிறப்பு மலரை வெளியிடுவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர்களுக்கும், நிதியுதவிபுரிந்த அன்பர்களுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும், சங்கங்கள், கழகங்கள், மன்றங்களுக்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

தேரேறி வரும் திருமுருகன் திருக்கோலம் கண்டு, அவன் இன்னருள் பெற்று, பேரின்ப வாழ்வு வாழ்வோமாக !

ஓம் சிவ, ஓம்சிவ, ஓம்சிவ
ஓம் சரவணபவ

**மலர் ஆக்கம்:**

**வெள்ளிவிழாக் காணும் பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கம்.**

## உய்யும் வழிகாட்டும் விசவத்தனை முருகேசா!

சந்த விசவத்தனை யெம் முருகேசா
கந்தா கருணாகரா கடம்பா
எந்தாய் நான் உய்யும் வழிகாட்டி
உன்பதத்தை வந்தடைய ஐயா அளித்தருள் வீர்!

★ ★ ★

மும்மலம் போக்கும் முருகேசர் நாளுமுனை
செம்மையாய்ப் போற்றும் சிறியேற்கு
இம்மைச் சுகம் தந்தாய் நின்பாதம் தூசாய் இருக்க
முகந் தந்தருள்வீர் முனைந்து.

**-அமரர் சைவமணி சோ. க. வேலாயுதர்.**


**பண்ணாகம் பொதுசன அமைப்புகள்**

ஸ்ரீமுருகன் அன்னதான சபை
பண்ணாகம்

ஸ்ரீ முருகன் எட்டாம் திருவிழா வாலிபர் சபை
பண்ணாகம்

அண்ணா கலை மன்றம்
பண்ணாகம்

தேரேறி வரும் முருகமூர்த்தியின் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாகுக

ஆங்கில மருந்து விற்பனையில் பல வருடகால முன்னோடிகள்
மெடிலான்ட் (ம)
பிரதான வீதி, சங்கானை

சிவாஸ் ஸ்ருடியோ
பண்டத்தரிப்பு
(சித்தன்கேணி)

கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
சங்கானை

## விளம்பர அன்பளிப்பு செய்தோர்

விஜேய் இன்டஸ்றீஸ்
உருக்கு தளபாட தயாரிப்பாளர்,
பண்டத்தரிப்பு.

மயூரன் பலசரக்கு மாளிகை
வழக்கம்பரை.

வலம்புரி
வட்டுக்கோட்டை.

கலைமகள் விலாஸ்
பிரதான வீதி,
சங்கானை.

ஸ்ரீதேவி தையல் அகம்
பிரதான வீதி,
சங்கானை.

இலட்சுமி ஸ்ரோர்ஸ்
(சந்தை)
சங்கானை.

லீலா வெதுப்பகம்
சங்கானை.

கிருஸ்ணா பழ வாணிபம்
பிரதான வீதி,
சுழிபுரம்.

சோ. சகாயநிதி
பண்ணாகம்.

க. விஜயகுமார்
(கடை)
சத்தியக்காடு,
சுழிபுரம்.

வளர்பிறை பட்டுச்சோலை
பிரதான வீதி,
சங்கானை.

ந. காசிப்பிள்ளை
(சந்தை)
சங்கானை,

சுப்றா கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.

A. J. வாச் வேக்ஸ்
பிரதான வீதி,
சங்கானை.

அம்பாள் களஞ்சியம்
தொல்புரம்,
சுழிபுரம்.

சு. யோகேஸ்வரன்
பண்ணாகம்.

சத்தியா இரும்பு அகம்
வட்டுக்கோட்டை.

அ. இராமசாமி
பணஞாகம்.

(45869)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கண் ஆஸ்பத்திரி நிறுவ லயன்ஸ் கழகம் முயற்சிக்கும்

## மாவட்ட பிரதி ஆளுநர் தெரிவிப்பு

திருநெல்வேலி, மார்ச் 22

''வட பிராந்தியத்தில் உள்ள லயன்ஸ் கழகங்கள் கண் பரிசோதனைகளையும் கண் சிகிச்சையையும் தங்கள் முக்கிய சமூக சேவையாகக் கருதிச் செயற்பட்டுவருவது பாராட்டுக்குரியது. யாழ்ப்பாணத்தில் கண் சிகிச்சைகளுக்கு எனத் தனியான கண் வைத்தியசாலை ஒன்றை நிறுவும் இப் பிராந்திய லயன்ஸ் கழகங்களின் நீண்ட காலத் திட்டம் விரைவில் நிறைவேற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் ஒத்துழைப்புடன் எமது 306 B மாவட்ட தலைமைப் பீடம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

லயன்ஸ் கழகங்களின் 306B மாவட்ட பிரதி ஆளுநர் லயன் எஸ் தில்லைநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபிராந்திய லயன்ஸ் கழகங்களினதும், லியோ கழகங்களினதும் ஒன்று கூடலும், கருத்தரங்கும் கடந்த ஞாயிறன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வட பிராந்திய லயன்ஸ் கழகங்களின் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெற்றன.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு லயன் எஸ். தில்லைநாதன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது-:

யுத்த அனர்த்தங்களினாலும், இடம் பெயர்வுகளினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட இப் பிராந்திய லயன்ஸ் கழக அங்கத்தவர்களினதும் மக்களினதும் நிலைமைகளை அறிந்து எமது தலைமைப் பீடம் மிகுந்த கவலையடைந்தது.

பல்வேறு வகையிலும் மிகுந்த பாதிப்படைந்த இப் பிராந்திய கழகங்கள் புனரமைக்கப்பட்டு புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு மீண்டும் உத்வேகத்துடன் செயலாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இதற்கு காரணமாக முயற்சி மேற்கொண்ட பிராந்திய தலைவர் திரு எஸ். எஸ். தங்கராஜாவையும் மற்றும் வலயத் தலைவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இக்கழகங்களின் சமூக சேவைத்திட்டங்களுக்கு எமது ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் கிடைக்கும் — என்றார்.

இவ் வைபவத்தில் கண் பூப்படலத்தினால் பாதிப்படைந்தவர்களுக்கு சத்திர சிகிச்சையின்போது பொருத்துவதற்கான 50 கண்ணாடி வில்லைகளை பிரதி மாவட்ட ஆளுநர் திரு. எஸ். தில்லைநாதன் பிராந்திய தலைவர் எஸ். எஸ். தங்கராஜா விடம் வழங்கினார்.

அத்துடன் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு சேர்ட்டுகள், கொய்யாத் தோட்டம் சன சமூக நிலையத்தின் நூல் நிலையத்திற்கு நூல்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டன. இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஐ-135)

# மஸ்கெலியாவில் 'கைப்பற்றிய ஏ. கே. துப்பாக்கி புலிகளுடையதா?

## பொலீஸார் சந்தேகிக்கின்றனர்

மஸ்கெலிய — நோர்வூட் பகுதியில் காசல்ரீ அணைக்கட்டுக்கு அருகில் அண்மையில் ஆயுதங்கள் சில தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அவை விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டவையா என்ற சந்தேகம் பொலீஸார் மத்தியில் எழுந்துள்ளது.

தமக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் நோர்வூட் பொலீஸார் காசல்ரீ அணைக்கட்டுக்கு அருகில் உள்ள வனராஜவத்த பொது மயானத்தில், 5 அடி ஆழத்துக்கு கிடங்கு ஒன்றை வெட்டி அங்கிருந்து ஏ. கே. ரக துப்பாக்கி ஒன்றையும், ரவைகள் 77 ஐயும், மகஸீன்கள் நான்கையும் கைப்பற்றினர்.

பொலித்தீனில் சுற்றப்பட்டு ''கிறீஸ்'' பூசப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட அந்தத் துப்பாக்கியில் அது எந்தநாட்டில் தயாரிக்கப்பட்டது என்றவிவரங்கள் இருக்கவில்லை என்றும்—

துப்பாக்கியின் குழலில் ''சுதன்'' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

தமிழ்ப் பெயர் ஒன்று அதில் இருந்ததால் அது விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என்று பொலீஸார் கருதுகின்றனர்.

ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட சில

# ஆசிரியர்கள் ''ரியூசன்'' நடத்த ஜூன் மாதம் முதல் தடை!

திருகோணமலை, மார்ச் 22

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் சேவைக் கால ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் எதிர் வரும் ஜூன் மாதம் முதல் பிரத்தியேக ,,ரியூசன்,, வகுப்புகளை நடத்து வதற்கு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

கல்விச் சேவையில் உள்ளவர்கள் பிரத்தியேக ரியூசன் வழங்குவதை முற்றாகத்தடை செய்ய முடிவு செய்துள்ள மாகாணக் கல்வியமைச்சு முதற்கட்டமாக இவர்களுக்குத் தடை விதித்துள்ளது.

தொடர்ந்து எல்லா ஆசிரியர்களும் ரியூசன் வழங்குவதைத் தடை செய்யவும் மாகாணக்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-150)

வடபிராந்திய

# போக்குவரத்து ஊழியர்களுக்கு 3 மாதம் சம்பளம் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாத காலமாகச் சம்பளம் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி மாதம் முதல் தமக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் — ஊழியர்கள் முறையிடுகின்றனர்.

உடன் தமக்கு சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அத்துடன் ஆபத்துக்கால படியையும் வழங்குமாறும் ஊழியர்கள்வடபிராந்தியபோக்குவரத்துச்சபை நிர்வாகத்தை கோரியுள்ளது.

(ஐ-3)

# நள்ளிரவு வேளை துப்பாக்கிச் சூடு; தாயும் மகளும் காயமடைந்தனர்

## நாவற்குழிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

நள்ளிரவு வேளை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீட்டினுள் படுத்திருந்த இருவர் காயமடைந்தனர்.

நாவற்குழி கோயிலாக் கண்டியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி அன்னபூரணம், (வயது 37) அவரது மகள் கந்தசாமி தவரஞ்சினி (வயது 14) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த தவரஞ்சினி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாயார் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார்.

(ஐ-15)

# யாழ்- திருமலை பயணிகள் அனுபவிக்கும் அவலங்கள்; தேவையற்ற சிரமங்களைத் தவிர்க்க சில நடைமுறைகள்

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பல் மூலம் திரும்ப விரும்பும் பயணிகள் இன்று மிகுந்த பயண தாமதத்தையும் இடர்ப்பாட்டையும் எதிர் நோக்குகின்றனர். பல்லாயிரக் கணக்கானோர் கப்பல் பயணத்திற்கு பதிவு செய்து விட்டுப் பொது மண்டபங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்து பயணமாகும் தினத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கின்றனர்.

இந்நெருக்கடி நிலைமைக்கு ஏதுவாகப் பின்வரும் காரணிகளை அவதானிக்க முடிகின்றது.

★ போதுமான கப்பல் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு கப்பல்கள் இல்லாத நிலை.

★ வன்னிப் பெரு நிலப் பரப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மீளச்குடியேறும் நோக்குடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் வவுனியா ஊடாக திருமலை வந்தடைதல்.

★ போக்குவரத்துச்சேவையில் ஈடுபட்ட இரு பயணிகள் கப்பல்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்து அவை இடை நிறுத்தப்பட்டமை.

★ பயணிகள் கப்பல்கள் இடைக்கிடை இயந்திரக் கோளாறுகாரணமாகசேவையில் ஈடுபடாது விடுவது.

★ திருமலை பிரதேசசெயலகத்திலும், கொழும்பு பம்பலப்பிட்டி கற்பகம் அலுவலகத்திலும் யாழ்ப்பாணம் திரும்புவதற்குப்பதிவு செய்த பயணிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வருவதில் ஏற்படுகின்ற தாமதம்.

★ பல்லாயிரக் கணக்கான பயணிகள் ஒரேநேரத்தில் யாழ். திரும்ப முயற்சித்து நிற்கின்றமை; தாம் வந்த அலுவல்கள் முடிந்துள்ளமை, இவ்விடம் தங்குவதற்கு வீட்டு வசதியின்மை, புதிய சூழலுக்கு இசைவாக்கம் பெற முடியாத நிலை, அதிகரித்த வாழ்க்கைச் செலவு போன்ற காரணங்களினால் பலரும் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப முற்பட்டு நிற்கின்றனர்.

மேற்கூறிய நிலைமைகளால் திருகோணமலை பட்டணப் பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும் தமது பணிகளைக் கப்பல் பயணிகள் தொடர்பான முறைப்பாடுகளையும், வேண்டுகோள்களையும் கவனிப்பதிலேயே கழிக்க நேரிடுகின்றது.

துரிதமான கப்பல் பயண வசதி இல்லாத நிலைமையில் பொதுமக்கள் பலரும் யாழ்ப்பாணம் திரும்ப முடியாது மாதக்கணக்கில் திருமலையிலும், கொழும்பிலும் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல்லாயிரம் ரூபாவை குறுகிய காலத்தில் செலவிட வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கப்பலில் உடன் யாழ்ப்பாணம் திரும்பலாம் என்ற நம்பிக்கையில் திருமலைக்கு வரும் மக்கள் பலர் இங்கு போதுமான தங்குமிட வசதி, வாழ்க்கைச் செலவை ஈடு செய்யும் பணவசதி என்பன இல்லாது அல்லலுறுகின்றனர்.

அண்மையில் இவர்கள் திருமலை நகரசபை மண்டபத்தில் வைத்து வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவிடம் கண்ணீர் மல்கத் தமது கஷ்ட நிலையை எடுத்துரைத்தனர். தாம் கப்பலில் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு உரிய வசதிகளை விரைவில் செய்து தருமாறு ஏகோபித்த குரலில் கேட்டுக் கொண்டனர்.

நிலைமையின் தாற்பரியத்தைக் கேட்ட மாகாண ஆளுநரும் தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார். அத்துடன் திருமலை நகர சபை மண்டபத்திலும், ஏனைய ஒரு சில பொது இடங்களிலும் தங்கியிருக்கும் மக்களுக்கு சில நாள்களுக்கு 3 வேளையும் இலவச உணவு விநியோகம் மேற்கொள்ளவகை செய்துள்ளார்.

**வே. தபேந்திரன்**

பலவாரங்களாக நீடிக்கும் இப் பிரச்சினையால் யாழ்ப்பாணம் திரும்பஎண்ணியுள்ள பயணிகளில் பலர் தமதுகைவசம் உள்ளபணம்முடிவடைந்த நிலையில் அடுத்த வேளை என்ன செய்வது, 750 ரூபா கப்பல் கட்டணத்தை எவ்வாறு செலுத்தி ஊர் போய்ச் சேருவது போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இவர்களுக்கு பயணம் தாமதிப்பதற்கு மற்றுமொரு [illegible] விண்ணப்பித்த காலப்பகுதி மிகக் குறுகியதாகக் காணப்படுவதனால் ஆகும். திருமலை பட்டணப் பிரதேச செயலகத்தினால் இப்பொழுது பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையின்படி கப்பலில் யாழ்ப்பாணம் திரும்ப விரும்பி விண்ணப்பிக்கும் ஒருவர் விண்ணப்பித்த திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 3 வாரங்களின் பின்னரே கப்பல் ஏற முடியும்.

பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமையவே இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. பயணம் செய்ய விரும்பும் பொது மக்களில் பலரும் இதனைச் சரிவர உணராது திருமலை பட்டணப் பிரதேசச் செயலக உத்தியோகத்தர்களைக் குறை கூறவும் முற்படுகின்றனர்.

பயணிகள் பலராலும் முன் வைக்கப்படுகின்ற ஒரு கூற்று ''நாம் யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத் தான் திருமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்குப் பயணமாகினோம். எனவே நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிப் போவதற்கு அவ்விதமான அனுமதி மீளவும் பெறத் தேவையில்லை'' என்பதே.

ஆனால் அவ்வாறு வந்த பயணிகளும் கூட பாதுகாப்பு அமைச்சின், அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு நிலை இருந்து வருவதால் அவசர தேவை கருதி உடன் யாழ்ப்பாணம் செல்ல எவருக்குமே முடியாதுள்ளது.

திருமலைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் வருபவர்கள் மீளவும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கான கால அளவை துரிதமாக்குவதற்குப் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது.

யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் பயணமாகி திருமலை வந்து சேருவோர் தாம் வந்த உடனேயே யாழ்ப்பாணம் மீளவும் திரும்புவதற்குரிய விண்ணப்பப் படிவத்தை நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். திருமலை துறைமுக வாயிலுக்கு முன்பாக மிக அருகில் தான் திருமலை பிரதேச செயலகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு வரும் ஒரு சிலரே இவ்வாறு செய்கின்றனர். அதனால் அவர்கள் தாம் வந்த காரியம் முடிந்த உடனேயே விரைவாக யாழ்ப்பாணம் திரும்ப முடிகிறது. ஏனையவர்களும் இவ்வாறு செய்வது கூடிய நன்மையளிக்கும். காலதாமதத்தை தவிர்ப்பதற்கு இது மிகச் சிறந்த வழி.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் யாழ். மண்ணிலிருந்து கப்பலேறி யாழ். மண்ணை மீளவந்தடைவது தொடர்பான நடைமுறை விடயங்கள் அனைத்தையும் ஏற்கனவே பயணம் செய்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து பயணம் செய்வதே சிறந்தது. முன்னையவர்களின் அனுபவங்களைக் கொண்டு பின்னையவர்கள் தமது பாதையை அமைத்துக் கொள்வது நல்லதல்லவா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரிசியோ அரிசி!

யாழ்ப்பாணக் குடா நாட்டில் புழுங்கல் அரிசிக்கு — குத்தரிசிக்கு — தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு மாதத்துக்கு முன்னர் கிலோ 24 ரூபாவாக விற்ற அரிசி இப்போது முப்பத்தாறு ரூபா வரை விற்கிறது! இது நெல் அறுவடைக் காலம். அப்படியிருக்க அரிசிக்கு இப்படி யானை விலை; குதிரை விலை!

கடந்த மாரியின் போது குடாநாட்டில் போதியளவு மழை வீழ்ச்சி இல்லை. அதனால் பத்துப் பரப்புக்காணியில் சராசரி ஒரு மூடை நெல்லும் நான்கு மூடை சப்பியும் என்றவாறே விளைச்சல் இருந்தது. நெற்சாகுபடி செய்தவர்களுக்குக் கைநட்டமே தவிர, உழைப்புக்கு ஏற்றபயன் இல்லை. பல நூற்றுக்கணக்கான ஹெக்ரயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத தடங்கல்கள், தடைகள் இருந்ததையும் மறந்துவிடுவதற்கில்லை.

அதனால் உள்ளூர் புழுங்கல் அரிசியும் கிடைக்க மாட்டாது. வடக்கின் நெற்களஞ்சியமான கிளிநொச்சியிலிருந்தும் அரிசியை எதிர்பார்க்கமுடியாது.

இதேவேளை, கிழக்கின் நெற் களஞ்சியமாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும் சந்தைக்கு நெல் கிடைக்காது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னரெல்லாம் மட்டக்களப்பு மாவட்டமே நெல் விளைச்சலில் அகில இலங்கையிலும் முதலிடம் வகிப்பதுண்டு. சில வருடங்களில் தான் குருநாகல் மட்டக்களப்பை முந்திக்கொள்ளும்.

அத்தகைய மட்டக்களப்பின் பிரதான விளை நிலம் படுவான்கரைப் பிரதேசமே. அங்கு விளைந்த நெல்லை அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட எம். பி. யோசப் பரராஜசிங்கம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்கு விவசாயிகள் படுவான் கரைக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. காரணம்...? வழமையானது தான் ...! பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ...! விளைந்த நெல்லை விவசாயிகள் அறுவடை செய்ய முடியாத அவலம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட முடியாமல் எட்டி உதைக்கப்படும் நிலை இது.

பெரும்போக நெல்லின் விளைச்சல் இம்முறை தென்னிலங்கைப் பகுதியிலும் வீழ்ச்சி கண்டுள்ளதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் அரிசியை மீண்டும் இறக்குமதி செய்யும் நிலை உருவாகலாம்.

விளைந்த நெல்லை அரசாங்கமே வாங்கிக் களஞ்சியப் படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி மாநாடு கூட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் இலங்கையின் அரசியல் அரிசியை மையமாக வைத்தே நடந்தது. அதனால் இலங்கை அரசியல் ''அரிசி அரசியல்'' என்று வர்ணிக்கப்பட்டது.

ஆனால் கோதுமை மா அறிமுகமான பின்னர் பாணே இந் நாட்டு அரசியலில் முதன்மை பெற்று வருகிறது.

இந்த நிலை நீடித்தால் அரிசி உற்பத்தியில் அக்கறை குறைந்து விடும். விவசாயிகள் வயிற்றில் அடி விழும். நாட்டின் பொருளாதாரத்தின் வேரை அறுக்கும்.

# தீர்வுத் திட்ட நகல் குறித்து ஐ.தே. கவுக்குள் முரண்பாடு

கொழும்பு, மார்ச் 22

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்த நகல் தொடர்பாக ஐ. தே. கவுக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் அரசமைப்புச் சீர்திருத்த நகலில் சில திருத்தங்களைச் செய்து அதை ஏற்பதன் மூலம் சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்று கட்சிக்குள் ஒருசாரார் கட்சித் தலைமையை வற்புறுத்துவதாகவும் —

இதேவேளை ஐ. தே. கவின் மற்றொரு சாரார், ஒற்றையாட்சியை இந்த நகல் பாதிப்பதால் அதை ஏற்கக் கூடாது என்று வற்புறுத்திவருவதாகவும் — 'த ஐலண்ட்' பத்திரிகையின் அரசியல் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நகல் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு முடிவுக்கு வரட்டும்; அதன் பின்னர் எமது நிலைப்பாட்டை தெளிவாக்குவோம் என்று ஐ.தே.க. தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது என்றும் அக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-150)

## யாழ். நகரில் டலிக்களம்

குருநகர், மார்ச் 22

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்படும் பலிக்களம் இசை, உரை நாடகம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட உள்ளது. இந் நாடகம் இவ்விரு தினங்களிலும் இலங்கை நேரப்படி மாலை 6.15 தொடக்கம் 8.30 மணி வரை நடைபெறும். பலிக்களத்தைப் பார்க்கச் செல்வோர் நாடகம் முடிந்து வீடு திரும்புவதற்கான விசேட ஏற்பாடுகளைச் செய்வதில் திருமறைக் கலாமன்ற வட்டாரங்கள் நேற்று ஈடுபட்டிருந்தன.

(அ-51)

## உடற்கல்விப் பாடநெறிக்கு யாழ்ப்பாணத்திலும் நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

தேசிய கல்வி நிறுவனம் நடத்தும் தொடர் கல்விப் பாடநெறிகளில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள உடற்கல்விப் பாடநெறி போதிக்கும் நிலையமாக யாழ்ப்பாணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பாட நெறியில் 50 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள் கற்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வலயம் ஒன்றின் அலுவலகத்திலும், சாவகச்சேரி கோட்ட அலுவலகத்திலும் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## பரிசளிப்பு விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 10.30 மணியளவில் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

கோப்பாய் கோட்ட கல்வி அதிகாரி ஆ. இராசேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (இ-3)

## உழவு இயந்திரம் அமுக்க வெடியில்

கொழும்பு, மார்ச் 22

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்று அமுக்க வெடியில் சிக்கியதனால் ஓர் இராணுவ வீரர் கொல்லப்பட்டார்.

(இ-4)

## சங்கானை ஆஸ்பத்திரியில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தினமும் வெளிநோயாளர் பிரிவில் 250-க்கு மேற்பட்ட நோயாளர்களுக்கும், வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

பதிவு பெற்ற இரண்டு வைத்திய அதிகாரிகளே இங்கு கடமையாற்றி வருவதால் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி பதவிக்கான வைத்திய அதிகாரி பதவி வெற்றிடமாக இருப்பதால் இங்கு கடமையாற்றும் பல்வைத்திய அதிகாரியே பொறுப்பதிகாரியின் கடமைகளையும் கவனித்து வருகின்றார். புதன்கிழமை தவிர்ந்த ஏனைய வாரநாள்களில் இங்கு பற்சிகிச்சைப் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

(ஐ-135)

## ஒய்வூதியரை அல்லற்படுத்தும் அவலம் எப்போது நீங்கும்?

அண்மையில் பிரதேச செயலகத்திலிருந்து விண்ணப்பப்படிவம் ஒன்று ஓய்வூதியர்களுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு முன்பும் இதே போன்ற ஒரு படிவம் அனுப்பப்பட்டது. முன்னர் அனுப்பப்பட்டிருந்த படிவத்தின் விவரங்களே இதிலும் கேட்கப்பட்டுள்ளன. இதில் ஒரு விவரம் மாத்திரமே புதிதாகக் கேட்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர் இளைப்பாறிய பொழுது எடுத்த சம்பள விவரமே அது.

### வாசகர் திருமுகம்

தற்போதுள்ள ஓய்வூதியர்களில் 15 ஆண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றவர்களும் உள்ளனர். இவர்களுக்கு அவை ஞாபகமிருக்க மாட்டாது. அத்துடன் விதவைகளாயிருப்பின் அவர்களுக்கும் தெரியாது.

ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு கோவை பிரதேச செயலகத்தில் இருப்பது இவைகளுக்காகத் தான். இக்கோவைகளைப் பரிசீலித்து இவ்விடயங்களை அறிவதை விடுத்து பிரதேச செயலக ஊழியர்கள் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை ஓய்வூதியர்களைக் கஷ்டப்படுத்திச் செய்ய முயற்சிக்கலாமா? இன்னொரு முக்கிய அம்சம் இவ் விண்ணப்பத்தில் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் கேட்கப்படவில்லை. மிக விரைவில் அவ்விலக்கங்களையும் பிரதேச செயலகத்தினர் கோரி இன்னொரு கடிதம் அனுப்புவர் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறான ஓய்வூதியர்களைக் கஷ்டப்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்து கோவைகளைப் பார்த்து வேண்டிய விவரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டுக்குச் சேவை செய்து ஓய்வு பெற்றுத் தள்ளாத வயதில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இன்னல்களுடன் சீவித்துவரும் ஓய்வூதியர்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள்.

ஆ. பேரின்பநாயகம்
தலைவர்
பருத்தித்துறை பிரதேச செயலக பகுதி
ஓய்வூதியர் சங்கம்

## வலி.தென்மேற்கு ஓய்வூதியரின் சுய விவரங்கள் சேகரிப்பு

### வாழ்க்கைச் செலவுப்படி வழங்க

திருநெல்வேலி, மார்ச் 22

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள் தங்கள் சுய விவரங்களை உடனடியாக பிரதேச செயலகப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக ஓய்வூதியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், குறிப்பிட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து, கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தி ஓய்வூதியரின் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் கணக்காளரிடம் சென்று தொடர்புகொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1991 ஆம் ஆண்டுக்குரிய வாழ்க்கைச் செலவுப்படி நிலுவை வழங்குவது தொடர்பாகவே இந்த சுய விவரங்கள் கேட்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## தவக்காலச் சிந்தனை

**(39ஆம் நாள் சனி)**

இயேசு செய்த அருஞ் செயல்களால் பயன் பெற்ற மக்கள் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். யூத குருக்களான பரிசேயர் இதனைக்கண்டு கோபம் கொண்டார்கள். ''இந்த ஆள் (இயேசு) பல அருங்குறிகளைச் செய்கின்றானே, இவனை இப்படியே விட்டால் இவனில் எல்லோரும் விசுவாசம் கொள்வர்'' (அரு. 11:47-48). இது யூதர்கள் அன்று இயேசுவைக் கொல்லச் செய்த சதி ஆலோசனை.

இதன் மறுபக்கம், எம்மை நோக்குவோம். தேவை வேண்டியோருக்கு யாராவது உதவ முன்வந்தால் அல்லது உதவினால் ஏன் நம்மால் பொறுக்க முடியவில்லை? அபாண்டங்கள் எத்தனை? தடைகள் எத்தனை? எல்லோரும் உண்மையாளர் என்று கூறவில்லை. இரண்டு நிலைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டாமா? சுயநலத்தாரை இனங்காண வேண்டும்! நடுவூரில் பழுத்த நச்சு மரத்தால் நன்மையுண்டா? நற்பணிக்கு கரம் கொடுப்போம்; நாளைய சமுதாயம் நலமாகும்!

- அ. பீற்றர் ராஜன் -

## ச. ச. நிலைய பிரதி நிதிகள் ஒன்று கூடல்

கொழும்புத்துறை, மார்ச் 22

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், சமாசம் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதி நிதிகள் ஆகியோருக்கான ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## நாளை

**பங்குனி 10**
ஞாயிற்றுக்கிழமை

திதி: சதுர்த்தசி
காலை 8.58 வரை
நட்சத்திரம்: பூரம்
காலை 8.41 வரை
பங்குனி உத்தரம்
பூரணை விரதம்
சுபநேரம்: 09.17-10.47
ராகுகாலம்: 04.47-06.17
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தபால் திணைக்கள நேர்முக தேர்வு: எங்களை அலைத்தது ஏன்?

யாழ். குடா நாட்டில் வேலை வங்கி மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படுவது யாவராலும் வரவேற்கப்படுவதும் சந்தோச சரமானதுமான விடயமாகும். வேலை வங்கியில் பதிந்தவர்களில் அதி உயர் புள்ளிகளைப் பெற்றவர்கள் தபால் திணைக்களத்தில் தபால் அதிபர் தரம் II B க்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். இதற்காக இரு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன. கடந்த டிசம்பரில் 2ஆவது நேர்முகத் தேர்வு நடைபெற்றது. வெள்ளத்தின் மத்தியில் யாழ். குடாவின் பல பகுதிகளில் இருந்தும் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர்.

நமது, பரீட்சைப் பெறுபேறுகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை என்பவற்றின் புகைப்படப் பிரதிகளை நேர்முகத் தேர்வில் ஒப்படைத்தோம். அந் நேர்முகத் தேர்வின் பெறுபேற்றை நாம் இன்று வரை எதிர்பார்த்து இருக்கிறோம். ஆனால் எழுதுவினைஞர் தேர்வின் மூலம் ஏற்கனவே 20 பேர் தபால் திணைக்களத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அந்தத் தேர்வு மூலம் தெரிவு நடைபெறின் எதற்காக எம்மை இப்படி அலைத்தார்கள்? எம்மிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் வேறு துறையில் வேலைக்கு அமர்ந்து 3 மாதங்களுக்கும் மேலாகி விட்டது. ஆனால் நாம்......?

இனி வேலை வங்கியும் எம்மை வேறு துறைக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைப்பது என்பது மிகவும் சந்தேகம் தான் இது சம்பந்தமாகத் தபால் திணைக்களத்தில் விசாரித்த போது தமக்கு ஒன்றும் தெரியாது என்று கையைவிரித்து விட்டார்கள். பாதிக்கப்பட்ட எமக்கு வேலை வங்கியாவது இரங்கி வேறு துறைகளுக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்குமா?

மீசாலை. க. திரவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் 22-03-97 நாளையும் 23-03-97

திருமறைக்கலாமன்றம்
வழங்கும்
"பலிக்களம்"
(திருப்பாடுகளின் காட்சி)
சனி - ஞாயிறு
தினமும்
இலங்கை நேரம் மாலை - 6.15 — 8 30 மணி வரை
இடம்: மன்ற அரங்கு, பிரதான வீதி.
(ஆசனப் பதிவு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

கௌரவ செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்.
(சி/357)



சந்தியா சந்தியா சந்தியா சந்தியா
சந்தியா சந்தியா சந்தியா சந்தியா
சந்தியா சந்தியா சந்தியா
சந்தியா சந்தியா சந்தியா சந்தியா
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(45945)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வயிரரத்தினம் விநாயகமூர்த்தி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வயிரரத்தினம் விநாயகமூர்த்தி 21-03-97 வெள்ளிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற த. விநாயகமூர்த்தி (இளைப்பாறிய, ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சுபத்திரா தேவி (ஆசிரியை, யாழ்ப்பாணக்கல்லூரி), டாக்டர். தம்பிராசா (அரசாங்க வைத்தியசாலை, பக்கமுனை), புனிதவதி (ஆசிரியை, சரஸ்வதி, அராலி இந்துக் கல்லூரி), மணிமேகலாதேவி, (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவசோதிராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கேசவராசன் (அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), இராசரத்தினம் (ஆசிரியர், வெஸ்லிக் கல்லூரி, கொழும்பு), திருஞானசம்பந்தர் (ஆசிரியர், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை), சிவசோதி, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தக்ஷாயினி, வரப்பிரதன், கணாதீபன், பிரதீபன், பிரசாந்தி, ஐங்கரன், அபராஜிதன், திருமாறன், சிவகிரிபன், சிவதுக்ஷசன், சிவதரிசினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-03-97 காலை 10.00 மணியளவில் கல்லூரி ஒழுங்கை வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

தகவல்:
செ கேசவராசன்

குக் வீதி,
வட்டுக்கோட்டை.
(9422)

## செல்லையா மயில்வாகனம்

(நவாலி நாச்சிமார் முருகன் ஆலய தர்மகர்த்தாசபை - தலைவர்)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா மயில்வாகனம் அவர்கள் 19-03-97இல் அதிகாலை 12 30 மணியளவில் இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பங்கஜேஸ்வரி, சிவனேஸ்வரி, பரமேஸ்வரி (யா/போதனா வைத்தியசாலை) விக்கினராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமலிங்கம், அருளானந்தம் (இணுவில்) தவராசா (யா/போதனா வைத்தியசாலை) ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் சிவப்பிரகாசம் (கொழும்பு), குலசேகரம், காலஞ்சென்ற செல்வரத்தினம், மாணிக்கவாசகர் (ஆசிரியர்), தம்பிராசா (வர்த்தகர்), யோகமலர் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-3-97 பிற்பகல் 2 மணிக்கு நவாலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி ஆனரயம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம. விக்கினரா்சா (மகன்)
சு. தவராசா (மருமகன்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(45944)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/1இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22 03 - 1997 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கட்சிகளின் நிலைவரம்

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் இன்று அதிகாலை 2.30 மணிவரை வெளிவந்த முடிவுகளின் படி கட்சிகளின் நிலைவரம் வருமாறு:-

பொ. ஐ. மு. — 3 நகரசபைகள், 13 பிரதேசசபைகள்
ஐ. தே. க. — 4 நகர சபைகள் — 2 பிரதேச சபைகள் — 1 மாநகர சபை.

# தேர்தல் முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்)

### ரத்தோட்டை பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 12611 வாக்கு — 8 உறுப்பினர்
★ ஐ.தே.க. — 9186 வாக்கு — 4 உறுப்பினர்

### வில்கமுவ பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 7115 வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 4400 வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 378 வாக்கு.

### மாலும்பட பிரதேச சபை
★ பொ.ஐ.மு. — 8136 வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ.தே.க. — 6485 வாக்கு — 3உறுப்பினர்
★ ஜே.வி.பி. — 1248 வாக்கு.

### ஹெப்பிட்டி கொலாவ பிரதேச சபை
★ பொ.ஐ. மு. — 5297 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 2864 வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 207 வாக்கு.

### ராஜாங்கனை பிரதேச சபை
★ பொ. ஐ. மு. —9721 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ தே.க — 3224 வாக்கு — 2 உறுப்பினர்
★ ஜே.வி.பி. — 791 வாக்கு —
★ ம. ஐ. மு. — 153 வாக்கு.

### மெதகம பிரதேச சபை
★ ஐ. தே. க. — 7000 வாக்கு — 6 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 6450 வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 468 வாக்கு.
★ சுயேச்சை 1 — 18 வாக்கு.

### லுனுகம் வெஹர பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 4518 வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ.தே.க. — 4108 வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1421 வாக்கு — 1 உறுப்பினர்

### கம்புறுப்பிட்டிய பிரதேச சபை
★ பொ. ஐ. மு. —14160 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 9389 வாக்கு — 4 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 1308 வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சை 1 — 1141 வாக்கு.

### துறப்பன பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 6649 வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 4761 வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 583 வாக்கு.

### மாத்தளை நகரசபை
★ பொ.ஐ மு. — 11189 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 8125 வாக்கு — 4 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 780 வாக்கு.
★ ம. ஐ. மு. — 377 வாக்கு.
★ ந. ச. ச. க — 188 வாக்கு.
★ இ. மு. மு. — 126 வாக்கு.

### ஹட்டன் - டிக்கோயா நகரசபை
★ ஐ. தே. க. — 3238 வாக்கு — 6 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு1 —1462 வாக்கு — 2 உறுப்பினர்
★ இ. தொ. கா — 1456 வாக்கு — 1 உறுப்பினர்
★ ஜே வி.பி. — 64

### தங்கல்ல நகரசபை
★ ஐ. தே. க — 2639 — வாக்கு — 5 உறுப்பினர்
★ பொ.ஐ.மு. — 2057— வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 457 — வாக்கு — 1 உறுப்பினர்

### பதவியா பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 5271 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 3591 வாக்கு — 4 உறுப்பினர்

### பண்டாரவளை நகர சபை
★ ஐ. தே. க. — 1477— வாக்கு — 5 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு 1 — — 1038 வாக்கு — 3 உறுப்பினர்
★ சுயேச்சைக் குழு 2— — 380 வாக்கு — 1 உறுப்பினர்
★ ஜே. வி. பி —38 வாக்கு

### ஹப்புத்தளை நகரசபை
★ பொ. ஐ. மு. — 1012 வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 628 வாக்கு — 3 உறுப்பினர்

### ஹங்மன பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 7701— வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ. தே. க — 6644— வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே.வி.பி. — 986 — வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு 1 — — 793

### ஹம்பாந்தோட்டை நகரசபை
★ ஐ. தே. க. — 2574 — வாக்கு — 6 உறுப்பினர்
★ பொ. ஐ. மு.— 2233— வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 144

### பஸ்கொட பிரதேச சபை
★ பொ. ஐ. மு. —11458 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 9659 — வாக்கு — 5 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 1234— வாக்கு — 1 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 827

### பதுளை மாநகரசபை
★ ஐ தே. க. — 8387 வாக்கு — 8 உறுப்பினர்
★ பொ ஐ மு. — 8138 வாக்கு — 6 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 759 வாக்கு — 1 உறுப்பினர்
★ ம. ஐ மு. — 510 வாக்கு

### லக்கல-பல்லேகம பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 4583 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 1917 வாக்கு — 2 உறுப்பினர்
★ ஜே வி. பி — 239 வாக்கு

### ஹொரவப்பொத்தானை பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 6969 வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 5558 வாக்கு — 4 உறுப்பினர்

# வெளிநாட்டவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொப்டரை கண்டு பிடிக்க முடியாத நிலையில் பாதுகாப்புப்படையினர் உள்ளனர்.

விடுதலைப் புலிகள் இந்த ஹெலிக்கொப்டரைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் அல்லது தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அது கடலில் வீழ்ந்திருக்கலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

இலங்கை அரசு கொள்வனவு செய்த ஆறு எம். ஐ. 24 ரகக் ஹெலிகொப்டர்களில் ஒன்றே தற்போது காணாமற் போயுள்ளது —

எம். ஐ. 24 ரக ஹெலி காணாமற்போன சமயம் அதில் இருந்த மூன்று விமானிகளில் இருவர் ரஷ்யர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# உள்ளூராட்சித்..

(முதலாம் பக்கத் தொடர்)

மாறாட்டம் செய்வதற்கும் எத்தனித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

புத்தளம் பகுதியில் ஆராய்ச்சிக் கட்டுவ, நல்லதரன் கட்டுவ, போகம் புவ ஆகிய இடங்களிலுள்ள வாக்குச் சாவடிகளில் வாக்குச் சீட்டுக்கள் கிழித்தெறியப்பட்டு வாக்காளர்கள் விரட்டப் பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலுள்ள நோர்வூட் வாக்குச் சாவடியில் ஆள்மாறாட்டம் செய்ய எத்தனித்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வலப்பனை என்ற இடத்தைச் சேர்ந்த கும்பல் கமுவ வாக்குச் சாவடியில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது.

ஹங்குரல் கெத்தவில் உள்ள உடவத்த வாக்குச் சாவடியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது

பெலியத்தவில் உள்ள றம்பைக்கெட்டிய வாக்குச் சாவடிக்கு அருகில் தென்மாகாண சபை அங்கத்தவரான எஸ். கே. றஞ்சித் ஐ. தே. க. ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

பெலியத்தவிலுள்ள மீகமெலவாக்குச் சாவடியில் வாக்குப்பெட்டி ஒன்றையும் சிலர் சேதப்படுத்தியுள்ளனர்.

செட்டம் மன்னவில் வாக்குச் சீட்டுகளும் ஏனைய உபகரணங்களும் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் ஆள்மாறாட்டம் இடம்பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (இ-3-4-10)

# புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தூதரகத்தின் சிரேஷ்ட ராஜதந்திரி வலோரி விஸ்ரோவ் நேற்று முன்தினம் ''ஐலண்ட்'' பத்திரிகைக்கு அளித்தபேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் ரஷ்ய நாட்டவர் எவரும் அரச படைகளுக்கு உதவவில்லை. ஆலோசகர் எவரையும் கொடுத்துதவவுமில்லை. ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்கள் எவற்றையும் நாம் வழங்கவில்லை.

ரஷ்யா நாட்டு தயாரிப்பான போர் விமானங்கள் மற்றும் தளபாடங்களை வேறு வட்டாரங்கள் மூலம் இலங்கை அரசு பெற்றுள்ளது.

ரஷ்ய தயாரிப்பான எம். ஐ 24 தாக்குதல் ஹெலிக்கொப்டர் காணாமற் போனது பற்றி இலங்கை அரசு எமக்கு அறிவிக்கவில்லை அதுபற்றி எமக்கு அறிவிக்கவேண்டிய தேவையும் இல்லை.

ரஷ்யாவைப் பொறுத்தவரையில் இலங்கை யுத்தத்தில் எவரையும் நாம் ஆதரிக்கவில்லை

எம். ஐ. 24, எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர்கள் எமது நாட்டுத் தயாரிப்புக்கள், எனினும் ரஷ்ய அன்ரனோவ் - 32 ரக போர் விமானங்களையோ, அல்லது ஹெலிக் கொப்டர்களையோ நாம் இலங்கைக்கு வழங்கவில்லை.

அவற்றை யாரிடம் இருந்து இலங்கை கொள்வனவு செய்ததோ எமக்குத் தெரியாது.

இப்படி அவர் கூறினார்.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org